**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கி இருந்த இல்லவாசிகளுள் சிலர் இயற்கை மரணம் அடைந்தது – ஈமச் சடங்கிற்கான செலவினம் – 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,58,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.31** **நாள்: 17.09.2014**

**ஜய–புரட்டாசி 1, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.62, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 04.06.2012.
2. அரசாணை (1டி) எண்.05, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03.03.2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.318/மஇநிர்(3)/2012, நாள் 02.06.2014.

----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கத்தில் தண்டனை பெற்ற இல்லவாசிகள் இயற்கை மரணமடைந்தால், அவர்களை அடக்கம் செய்வதற்கு ஆகும் ஈமச் சடங்கிற்கான செலவினத்தை ரூ.500/– லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தியும், இக்கூடுதல் செலவினத்திற்காக 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு ரூ.22,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மறுவாழ்வு இல்லங்களில் மரணமடைந்த 44 இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்கென கூடுதலாக ரூ.88,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. எனினும் அத்தொகை பணமாக்கி வழங்கிட இயலாமையால் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கடந்த ஆண்டில் மரணமடைந்த மேற்படி 44 இல்லவாசிகளையும் சேர்த்து, நடப்பு நிதியாண்டிலும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியிருந்த இல்லவாசிகளுள் இயற்கை மரணம் எய்திய 129 இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்காக செலவு செய்த தொகை ரூ.2,58,000/–ஐ, 2014–2015 ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**[த.பி.பா]**

3. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு மறுவாழ்வு இல்லங்களில் மரணமடைந்த 129 இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்கான தொகையான ரூ.2,58,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரம் மட்டும்), பின்வரும் அரசு மறுவாழ்வு இல்ல விவரப்படி, ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | நாளது தேதிவரை இறந்தவர்களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு வழங்கும் தொகை (ரூ.2000/– வீதம்) |
|---|---|---|---|
| 1. | செல்லியம்பட்டி | 16 | ரூ.32,000/– |
| 2. | விண்ணப்பள்ளி | 14 | ரூ.28,000/– |
| 3. | தேவியாக்குறிச்சி | 11 | ரூ.22,000/– |
| 4. | யா. புதுப்பட்டி | 16 | ரூ.32,000/– |
| 5. | புதுக்கோட்டை | 17 | ரூ.34,000/– |
| 6. | மல்லவாடி | 7 | ரூ.14,000/– |
| 7. | பரனூர் | 22 | ரூ.44,000/– |
| 8. | பர்கூர் | 9 | ரூ.18,000/– |
| 9. | மனையேறிப்பட்டி | 12 | ரூ.24,000/– |
| 10. | உளுந்தூர்பேட்டை | 5 | ரூ.10,000/– |
| | **மொத்தம்** | **129** | **ரூ.2,58,000/–** |

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–திட்டத்தில் சேராதது – KL–தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் – 05–அலுவலகச் செலவுகள் – 02–ஏனைய சில்லறைச் செலவுகள்”. (து.தொ.கு.2235–02–104– KL-0527)**

5. மேலே பத்தி 3–ல், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.2,58,000/–ல், 2014–15 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.22,000/– போக, மீதமுள்ள தொகை ரூ.2,36,000/– திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கம் 2014–2015ல் சேர்க்கப்படும். இந்நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இத்தொகையைப் பெற்று இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இச்செலவினத்தை திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கீடு 2014–2015க்கான வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை நிதி (சந)த் துறைக்கு அனுப்பப்பும்போது, இச்செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

[த.பி.பா]

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.49603/நிதி(சந)/2014, நாள் 15.09.2014–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1075 (ஆயிரத்து எழுபத்தைந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு மறுவாழ்வு இல்லங்கள்,
செல்லியம்பட்டி / பர்கூர் / தேவியாக்குறிச்சி / மனையேறிப்பட்டி / விண்ணப்பள்ளி /
யா. புதுப்பட்டி / புதுக்கோட்டை / மல்லவாடி /பரனூர் / உளுந்தூர்பேட்டை.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
**நகல்**
நிதித் (ச.ந / வ.செ.பொது. II) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.